it already. I want to know how this confusion took place. I would like the Chief Minister to help us by giving us an explanation with regard to this matter.

MR. SPEAKER : I invite the attention of Dr. H. V. Hande to Rule No. 92 which reads thus :—

"(1) If a motion for leave to introduce a Bill is opposed, the Speaker, after permitting, if he thinks fit, a brief statement from the member who moves and from a member who opposes the motion, may without further debate put the question thereon

(2) If such a motion is agreed to, the Bill may be introduced."

So, it is very clear that no debate is permitted. I now call upon the Chief Minister to move the motion for leave to introduce the Bill.

DR. H. V. HANDE : I raised a point of order.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ் நாடு 1971-ம் ஆண்டு மதுவிலக்கு (செல்திறனை நிறுத்தி வைத்தல்) சட்டமுன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு மதுவிலக்கு (செல்திறனை நிறுத்திவைத்தல்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டது.

ஏற்போர் 'ஆம்' என்றனர்.

DR. H. V. HANDE : Sir, I am opposing the Motion.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அறிமுகம் செய்ய அனுமதி வழங்கப்பட்டது.)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ் நாடு 1971-ம் ஆண்டு ஆயத்தீர்வை சட்டமுன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஆயத்தீர்வை சட்ட முன்வடிவை அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும், மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.